IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.9

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ரமேஷ் |
| FATHER NAME | - | திரு.விநாயகம் |
| VILLAGE | - | செதுக்கரை |
| TALUK | - | குடியாத்தம். |
| OCCUPATION | - | நேர்முக உதவியாளர்,குடியாத்தம் கோட்டாட்சியர் அலுவலகம் |
| AGE | - | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.07.2025.

எதிரிகள் ஆஜர்

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் , நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வேலூர் வட்டாட்சியராக பணிபுரிந்த போது கடந்த 11.01.2021 அன்று வட வேலூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ரஞ்சித் என்பவர் வேலூர் வடக்கு காவல் நிலையம் ஆஜராகி தந்த புகாரில் கிராம உதவியாளர்கள் திரு.ஆனந்தன், திரு.ஜீவரத்தினம் ஆகியோர் 11.01.2021 அன்று காலை 07.30 மணியளவில் ரோந்து பணியில் இருந்தபோது வேலூர் மாநகராட்சி ஊழியர் திரு.கௌதமன் என்பவர் முத்துமண்டபம் சுடுகாட்டில் பாலாறு எரிமேடையின் பின்புறம் மனித உடல் ஒன்று ஒரு கால் மட்டும் தெரிந்த நிலையில் மண்ணில் புதையுண்டு இருப்பதாக அளித்த தகவலின் பேரில் மேற்கண்ட புகார்தாரரான கிராம நிர்வாக அலுவலர் சம்பவ இடத்திற்கு சென்று மனித உடல் ஒன்று ஒரு கால் மட்டும் தெரிந்த நிலையில் மண்ணில் புதையுண்டு கிடப்பதை அறிந்து அதன் மீது நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டி அளித்த புகார் சம்பந்தமாக வேலூர் வடக்கு காவல் நிலையத்தைச் சார்ந்த ராஜேகரன் உதவி ஆய்வாளர் என்பவர் காவல் நிலைய குற்ற எண்.26/2021 U/S.174 Cr.P.C(சந்தேக மரணம்) வழக்கு பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வேலூர் வடக்கு காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளர் அவர்கள் வட்டாட்சியராகிய என்னிடம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி கடிதம் அளித்ததின் பேரில் இது தொடர்பாக 11.01.2021 அன்று என்னால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நான் மேற்கண்ட நாளில் சம்பவ இடமான முத்து மண்டபம், சுடுகாட்டில் எரிமேடைக்கு பின்புறம் சாட்சிகளுடன் சென்று ஒரு கால் மட்டும் தெரிந்து புதையுண்டு கிடந்த பிரேதத்தை மண்ணில் இருந்து தோண்டி எடுத்து பிரேத விசாரணை செய்தேன். பிரேதமானது இடது மார்பில் வெட்டு காயத்துடனும், இடது வயிற்றுப் பகுதியில் 3 குத்துக் காயத்துடனும், வலது தொடையில் வெட்டுக் காயத்துடனும், வலது முழங்கை இல்லாமலும, வலது பாதத்தில் 5 விரல்கள் இல்லாமலும் இருந்தது. மேலும், பிரேதமானது அணிந்திருந்த உடை சிவப்பு நிற அரைக்கை சட்டை, கட்டம் போட்ட புளூ கலர் லுங்கியும் அணிந்திருந்தது. மேலும், பிரேதமானது துர்நாற்றம் வீசியும், அழிகிய நிலையில் உப்பியும் இருந்தது. இதனை அடுக்கம்பாறை மருததுவக் கல்லூரியில் பிணக் கூறாய்வு செய்ய இயலாது என்பதால் மருத்துவக் குழுவினை சம்பவ இடத்திற்கே வரவைத்து பிணக் கூறாய்வு செய்யப்பட்டது. அந்த சுடுகாட்டில் வெடடியான் பணி செய்த வெங்கடேசன் மற்றும் பிச்சாண்டி வாதி திரு.ரஞ்சித் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர்கள் திரு.ஆனந்தன், திரு.ஜீவரத்தினம் இவர்களுடன் மேற்கண்ட பிரேதம் குறித்து விசாரணை செய்த போது சம்பவ இடத்தில் இருந்த மேற்கண்ட நபர்கள் தோட்டப்பாளையம்,

அருகந்தப் பூண்டியைச் சேர்ந்த வேலுவைப் போல உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் இது சம்பந்தமாக வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் அருகந்தப் பூண்டியைச் சேர்ந்த வேலு மனைவி ஈஸ்வரி என்பவர் தனது கணவர் காணாமல் போனதாக அளித்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.23/2021 U/S.Man Missing வழக்கு பதிவு செய்யப்பட்டதாக அறிந்து அவரையும் , அவரது உறவினர்களுடன் சம்பவ இடத்திற்கு வரவழைத்து விசாரணை செய்ததில் மண்ணில் தோண்டி எடுக்கப்பட்ட பிரேதம் தமது கணவர் வேலு தான் என்றும், தமது கணவர் கடந்த 04.01.2021 அன்று கடைசியாக இருசக்கர வாகனத்தில் சென்றவர் அதன் பிறகு வீடு திரும்பவில்லை என்றும் எனது விசாரணையில் பிரேதத்தை அடையாளம் காட்டி சொன்னார். தற்போது பிரேதத்தில் உள்ள சிவப்பு கலர் சட்டை. கட்டம் போட்ட புளூ லுங்கியை வைத்து தனது கணவர் வேலு தான் என்று அடையாளம் காண்பித்தார். பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.4 மருத்துவமனைக்கு பிணக் கூறாய்வு செய்ய மருத்துவக் குழுவை சம்பவ இடத்திற்கே வரவழைத்து செய்ய அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.5 ஆகும். வேலுவின் பிரேதத்தின் மீது இருந்த சிவப்பு கலர் அரைக்கை சட்டை சா.பொ.2 கட்டம் போட்ட புளூ கலர் லுங்கி சா.பொ.3 ஆகும். மேலும் மண்ணில் புதையுண்ட பிரேதத்தின் மீது விசாரித்த போது சாட்சிகள் மற்றும் வாதிகள் பிரேதத்தை மர்ம நபர்களால் ஆயுதத்ததால் குத்தப்பட்டும், வெட்டப்பட்டும், கொலை செய்துள்ளனர் என தெரிவித்தனர். வழக்கை மேற்கொண்டு புலன் விசாரணை செய்ய போலீசாரிடம் கேட்டுக் கொண்டேன். போலீசார் என்னை இது சம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை – இல்லை</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 30.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

30-7-25

**Additional District Judge(FTC)**
**Vellore.**